**07.09.2022 O.S.No. 29 / 2016 (PW1) காத்தூன்பீவி க-பெ. இஸ்மாயில்,**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1) முகமது இஸ்மாயில், முகமது அனிபா, முகமது யூசுப் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். மேற்படி மூவரும் உறவினர்கள் என்ற முறையில்தான் தாவா சொத்தை எனக்கு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எந்த தேதி, மாதம், வருடத்தில் எழுதிக் கொடுத்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. தாவா சொத்தை எனக்கு எழுதிக் கொடுத்ததற்கு பணம் எதுவும் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. நான் வீடுகட்டி 10 வருடங்கள் ஆகிறது, வருடம் எனக்கு தெரியாது.

2) நான் சர்வே எண்.41ன்படி வீடு கட்டியுள்ளேன். நான் 580 சதுரடியில் வீடு கட்டியுள்ளேன். நான் கிழக்கு பக்கமாக வாசல் வைத்து வீடு கட்டியுள்ளேன். நான் இன் ஜினியரை வைத்துதான் வீடு கட்டியுள்ளேன். நான் வீடு கட்டியுள்ள இடத்திற்கும் மேற்கு திசையில் சர்வே எண்.44ல் உள்ள இடம் உள்ளது. மேற்படி சர்வே எண்.44ல் உள்ள இடம் பிரதிவாதி பக்கிர் முகமது என்பவருக்கு கிரையப் பத்திரம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.44ல் உள்ள இடத்தை பிரதிவாதி எந்த வருடம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சர்வே எண்.44ல் உள்ள இடம் காலியிடமாகத்தான் உள்ளது.

3) மேற்படி சர்வே எண்.44ல் உள்ள இடம் எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி பக்கிர் முகமது எந்த சர்வே எண்ணில் வீடு கட்டியுள்ளார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி பக்கிர் முகமது கூரை வீடுதான் கட்டியுள்ளார். மேற்படி பிரதிவாதி கட்டியுள்ள கூரை வீடு எவ்வளவு இடத்தில் கட்டியுள்ளார் என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.41ல் உள்ள இடத்தை பிரதிவாதி எந்த அடிப்படையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் பிரதிவாதி மண்சுவர் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். சர்வே எண்.41ல் உள்ள இடத்தில் கிழக்கு பக்கத்தில் பிரதிவாதி மண்சுவர் கட்டியுள்ளார்.

4) மேற்படி மண்சுவர் சுமார் அரை செண்டுக்குள் இருக்கும். அதன் நீளம், அகலம் எனக்கு தெரியாது. அந்த மண்சுவர் சுமார் கட்டி 4,5 வருடங்கள் இருக்கும். பிரதிவாதி மேற்படி மண்சுவரை எதற்காக கட்டினார் என்றால் புழங்குவதற்காக மண்சுவரை கட்டியுள்ளார். அந்த மண்சுவரின் உயரமும் எனக்கு தெரியாது. பிரதிவாதி கட்டியுள்ள மண்சுவர் சர்வே எண்.41ல் கட்டியுள்ளார் என்பதை சர்வேயர் வந்து அளந்து கூறினார், அதனால் சொல்கிறேன். சர்வேயர் எந்த தேதி, மாதம், வருடத்தில் அளந்தார் என்று எனக்கு தெரியாது. சர்வேயர் வந்து அளப்பதற்கு யார் பணம் கட்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது, எனது மகன்களைத்தான் கேட்க வேண்டும்.

A DHARANIDHARAN
Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif Court, Devakottai 2022.09.07 12:19:02 +0530

5) பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து சுவர் கட்டியுள்ளார் என்ற விபரத்தை நான் பிராதில் எத்தனையாவது இலக்க சொத்தில் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது, சர்வே எண்.41ல் ஆக்கிரமிப்பு உள்ளது. பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்திற்காக நான் கமிஷன் பெட்டிசன் எதுவும் போட்டுள்ளேனா என்றால் போடவில்லை. பிரதிவாதி கட்டியுள்ள கூரை வீட்டில்தான் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி பக்கிர் முகமது சர்வே எண்.43ல் கூரை வீடு கட்டியுள்ளாரா, சர்வே எண்.44ல் கூரை வீடு கட்டியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

A DHARANIDHARAN
Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif Court, Devakottai 2022.09.07 12:19:02 +0530